முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1240

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.02.2023, திங்கட்கிழமை

1. மாதர்மசக்தியாய் வாழும் அரங்கா
   மாதவயோகம் பெற்ற ஞானதேசிகா
   பூதலத்தில் உன் தர்மபலத்தை கொண்டே
   புகழ்மிக்க ஞானலோகம் ஆக்கவேண்டி
2. வேண்டியே அற்புதத்தை நடத்துகின்ற
   வேலவனின் சக்தியே அரங்கனே
   உண்டான உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை சுபகிருது சால் திங்களில்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 08 ம் நாள், 20.02.2023 திங்கட்கிழமை)
   அரங்கன் பலம் இன்னும் உயர எடுத்துரைப்பேன்
   வாசிவென்ற ஞானிகள் எல்லோருமே
   வலம்வந்து உமக்கு சக்தி ஊட்டிஇருக்க
4. இருக்கவே அரங்கன் உன் தொடர்பு கொண்ட மக்களுக்கு
   இலகுவாய் ஞானிகளாகும் சக்தி கிட்டி
   ஆற்றல்பட உலகமாற்றத்தை அரங்கன் உன்
   ஆசியோடு உலகோர் கண்டு மகிழ்வர்
5. மகிழவே அற்புதத்தை நடத்தும் மாதவசி நீ
   மக்களைக் காக்கும் மகா யோகிநீ
   அகிலத்தார் உன்னை அறிந்து உணர்ந்து
   அபயமென உன்வழி சரணடைந்துவிட்டால்போதும்
6. போதுமப்பா இந்த உலகமாற்றம்
   புகலுவேன் சடுதி நடந்தேறும்
   பூதலம் எங்கும் சன்மார்க்க நெறிகூடி
   புண்ணியவான்கள் பெருக ஞானத்தலைமையாக
7. ஆகவே உலகமாற்றம் தானும்
   அரங்கன் விரும்புகின்ற ஞான ஆட்சியாக
   காலமெல்லாம் ஞான சித்தர் காலமாக மாறி
   கலியுகம் ஞான யுகமாக அற்புதம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–